நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 297 /2025

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுதாகர் |
| தந்தை / கணவர் பெயர் | : | பச்சமுத்து |
| கிராமம் | : | ஆரிகவுண்டனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 32 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 04–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.24PM.

1. நான் தற்போது தெத்திகிரிப்பட்டி ஆரிகவுண்டனூரில் குடியிருக்கிறேன். நான் தனியார் பேருந்தில் நடத்துநராக பணி புரிந்து வருகிறேன். 1வது எதிரி சாந்தா எனது மாமியார் ஆவார். 2வது எதிரி தமிழிசை எனது மனைவி ஆவார். சுமார் 1 வருடத்திற்கு முன்பு எனக்கும்எனது மனைவிக்கும், அவரது குடும்பத்தாருக்கும்

ஏற்பட்ட வாய் தகராறு சம்பந்தமாக நான் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது புகார் வாக்குமூலம் கொடுத்தேன்.

2. அதில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. அதில் உள்ள மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை. மற்றபடி சங்கதிகளை குறிப்பிட எனக்கு விருப்பம் இல்லை. நானும் எனது மனைவியும் இந்த சம்பந்தமாக சமாதானம் செய்து கொண்டோம். என்னை யாரும் கட்டாயபடுத்தி சமதானம் செய்து கொள்ள சொல்லவில்லை. நானாக எனது சுய விருப்பத்தின் பேரில் சமாதானம் செய்து கொண்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. (**புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.32PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 297 /2025

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பரமசிவம் |
| தந்தை / கணவர் பெயர் | : | வைத்தி |
| கிராமம் | : | கோனூர், கூழையூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 2 |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 04–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.34PM.

1. நான் தற்போது கோனூர் கிராமம் கூழையூரில் குடியிருக்கிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். அ.சா.1 சுதாகர் எனது அக்கா மகன் ஆவார். அ.சா1 சுதாகர் குடும்ப பிரச்சினை காரணமாக அவரது மனைவி மீதும், மாமியார் மீதும், புகார் கொடுத்திருந்தார். அந்த சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை

விசாரிக்கவில்லை. மேற்படி எனது அக்கா மகன் சுதாகரும், அவரது மனைவியும் சமாதானம் செய்து கொண்டார்கள்.

2. சம்பவத்தின்போது சுமார் 7 மாதங்களுக்கு முன்பு எனது அக்கா வீட்டிற்கு சாமி கும்பிடுவதற்காக சென்றிருந்தேன். எனது அக்கா மகன் அ.சா1 சுதாகர் தனது மனைவியை சமாதானம் பேசி அழைத்து வரலாம் என்று சொன்னார். அதன் அடிப்படையில் நானும், எனது மனைவி தமிழ்செல்வி, சுதாகரின் அம்மா செல்வி, சுதாகரின் பெரியம்மா முத்தம்மா, சுதாகரின் பெரியம்மாளின் மகன் அஜித்குமார், மற்றும் சுதாகர் ஆகியோர் அங்கு சென்றோம்.
3. அங்கு செல்லும்போது மாலை 5.00 மணி இருக்கும். அங்கு சென்றபோது 2 வது எதிரியின் அப்பா வேலைக்கு சென்று விட்டதாக சொன்னார்கள். 2 வது எதிரி வர மறுத்தால் நாங்கள் காத்திருந்தோம். அதன்பிறகு ஆட்களை வரவழைத்து அடையாளம் தெரியாத 12 ஆண்கள் சுதாகரை கையால் அடித்து விட்டார்கள். மேலும் அ.சா1 சுதாகர் வைத்திருந்த செல்போனையும், தங்க செயினையும் பறித்து சென்றுவிட்டார்கள்.
4. அதன்பிறகு நான் சென்றிருந்த இருசக்கர வாகனத்தையும் பிடுங்கி வைத்து கொண்டார்கள். அ.சா1 சுதாகர் வண்டியையும் பிடுங்கி வைத்து கொண்டார்கள். அதன்பிறகு வேறு நபர்கள் மூலமாக வாகனத்தை திரும்ப ஒப்படைத்துவிட்டார்கள். இவ்வளவு நடந்த பிறகும் நாங்கள் சமாதானம் பேசி பிரச்சினையை முடித்து கொண்டோம். மேறபடி செல்போனையும், செயினையும் இதுவரை திருப்பி தரவில்லை. அந்த செல்போன் சம்பவத்தின்போது எனது மனைவி வீடியோ எடுக்க பயன்படுத்தியது.செயின் அ.சா1 சுதாகருக்கு சொந்தமானது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எங்களது தரப்பில் நாங்கள் 5 நபர்கள் சென்றிருந்தோம். நாங்கள் அங்கு சென்றிருந்தபோது அவர்கள் வீட்டில் ஆண் நபர்கள் யாரும் இல்லை. நாங்கள் சென்றிருந்தபோது எதிரிகள் வீட்டில் ஆண் நபர்கள் இல்லை என்றும் வந்ததும் பேசி அனுப்பி வைக்கிறோம் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. வீட்டில் ஆண் நபர் இல்லை என்று மட்டும்தான் சொன்னார்கள்.
2. நாங்கள் அதை கேட்காமல் பிரச்சினை செய்ததால்தான் அருகில் இருந்த நபர்கள்

அதை தடுக்க வந்தார்கள் என்றாலும், அதனால் அவர்களை எங்களை தாக்கினார்கள் என்று பொய் புகார் அளித்தோம் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா1 சுதாகரை அடிக்கவோ, திட்டவோ இல்லை என்றால் சரிதான்.

3. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் மறுநாள் செல்போன் கீழே கிடந்ததாக எடுத்து என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. அ.சா1 சுதாகர் எனது அக்கா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.54PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**